**முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை**

**OS.No. 150 /2022**

Date: 26.02.2026 DW. 2 ( ஆறுமுகம்)

**வாதி தரப்பு குறுக்குவிசாரணை :**

நான் என்ன படித்துள்ளேன் என்றால்B.Com படித்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி நாகராஜ் என்பவரை எனக்கு எவ்வளவு நாட்களாக பழக்கம் என்றால் சுமார் 20 வருட காலமாக பழக்கம். பிரதிவாதி நாகராஜ் தான்வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் போட அழைத்து சென்றாரா என்றால் இல்லை வாதிதான் அழைத்து சென்றார். வாதி என்னை அழைத்து செல்லவில்லை என்றும் பிரதிவாதிதான் என்னை அழைத்து சென்றார் என்றும் இந்த வழக்கிற்ககாக வாதி என்னை அழைத்து சென்றார் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி பிரதிவாதி வீட்டில் எந்த வருடம் வாடகைக்கு இருந்தார் என்றால் 2016 ல் இருந்தார். எந்த வருடம் ஒத்திக்கு இருந்தார் என்றால் 2018 ல் இருக்கலாம். வாதி பிரதிவாதி வீட்டில் வாடகைக்கு மற்றும் ஒத்திக்கு இருந்த ஆவணங்கள் எதுவும் நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. பிரதிவாதி மனைவி பிரதிவாதி மீது அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எந்த தேதி மாதம் வருடம் புகார் கொடுத்தார் என்றால் 03.05.2018 புகார் கொடுத்தார். பிரதிவாதிக்கும் அவரது மனைவிக்கும் காவல் நிலையத்தில் பேசி சமரசம் செய்யப்பட்டதற்காக எழுத்துமூலமான ஆவணம் எழுதப்பட்டதா என்றால் இல்லை. நான் சொல்வது போல் பிரதிவாதிக்கும் அவரது மனைவிக்கும் எந்தவித பிரச்சனையும் இல்லை என்றும் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான்தான் மேற்படி

பிரச்சனையை பேசித் தீர்த்தேன். பிரதிவாதி வாதியிடம் நகையை திருப்புவதற்காக கடன் கேட்டார் என்று என் சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் நான் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி பிரதிவாதிக்கு பணம் கொடுக்காமலேயே வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதிக் கொடுத்தார் என்று என் சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் நான் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. கிரைய இடம் சம்பந்தமாக வாதி என்மீது மானாமதுரை நீதிமன்றத்தில் O.S. 45/2021 என்ற வழக்கை தாக்கல் செய்து இருந்தார் என்றால் சரியல்ல. என் மனைவியின் பெயர் அமிர்தவள்ளி என்றால் சரிதான். என்னிடம் கிரையம் பெற்ற இடத்தில் தான் வாதி மாரிமுத்து வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். வாதி மேற்படி வீடு கட்டும்போது எங்கள் இடத்தையும் சேர்த்து ஆக்கிரமித்து வீடு கட்டிவிட்டார் என்றும் 2021லிருந்து பிரச்சனை நடந்து வருகிறது என்றால் சரிதான். நானும் வாதியும் சண்டை போட்டுக் கொண்டது சம்மந்தமாக குற்ற எண் 451/2021 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2021 ம் வருடத்திலிருந்து நானும் வாதியும் பேசிக்கொள்வது இல்லை என்றால் சரிதான். பிரதிவாதி நாகராஜ் தான் சாட்சி சொல்ல என்னை அழைத்து வந்தார் என்றால் சரிதான். அதற்காக நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். எனக்கும் வாதிக்கும் ஏற்கனவே பிரச்சனை உள்ளதால் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி மீது நானும் என் மனைவியும் பல புகார் மனுக்களை அனுப்பியுள்ளோம் என்றால் சரிதான். நான் சொல்லியுள்ளவாறு வாதி எந்த தவறும் செய்யவில்லை என்றும் வேண்டுமென்றே அவர்மீது புகார் கொடுத்து வந்துள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதி நாகராஜ் வாதி பணம்

கொடுக்காமல் ஆவணத்தில் கையொப்பம் வாங்கி கொண்டார் என்று ஏதாவது  நடவடிக்கை எடுத்துள்ளாரா என்றால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் எந்த வருடம் என்றால் 2018 ல் புகார் கொடுத்துள்ளார். நான் சொல்வது போல் பிரதிவாதி நாகராஜ் எந்தவித புகாரும் கொடுக்கவில்லை என்றும் புகார் கொடுத்ததாக பொய்யாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு நெருக்கமானவர் என்பதால் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க வாதியிடம் உள்ள முன்விரோதம் காரணமாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>:** இல்லை

சாட்சி சொல்லியபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு கையொப்பமிடப்பட்டுள்ளது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.02.26 18:25:21 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

சிவகங்கை